**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.**

**முன்னிலை: திரு. K. முரளிதரக்கண்ணன், B.A., B.L.,**
**தலைமை நீதித்துறை நடுவர், பெரம்பலூர்.**

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3 ஆம் நாள் புதன்கிழமை

**குற்ற பல்வகை மனு எண்.675/2026**
**(CNR No: TNPB02-001747-2026)**
**அமர்வு வழக்கு எண்.14/2023**

ஷேக் இப்ராகிம், (A3)
த.பெ. பஷீர்,

**.. மனுதாரர்/3-வது எதிரி.**

/எதிர்/

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்
பெரம்பலூர் காவல் நிலையம்
கு.எண்.223/2015

**.. எதிர்மனுதாரர்/புகார்தாரர்.**

இந்த மனு இன்று இந்த நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/3-வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் **திரு. S. மணிவண்ணன்** முன்னிலையாகியும், எதிர் மனுதாரர்/அரசு தரப்பில் கூடுதல் அரசு வழக்கறிஞரும் முன்னிலையாகி இருதரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின் அடிப்படையிலும், மனு மற்றும் வழக்கில் தொடர்புடைய ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததன் அடிப்படையிலும் பின்வருமாறு இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**உத்தரவு**

மனுதாரர்/3 வது எதிரி தரப்பில் குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் 70(2)-ன் படி எதிரி மீது இந்நீதிமன்றம் கடந்த 08.04.2026-ம் தேதி பிறப்பித்த பிணையில் விடமுடியாத பிடியாணையை திரும்ப பெறக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிரி சரணடைந்தார். மேற்படி எதிரியின் சரணடைவு இந்நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்/எதிரி அசல் வழக்கில் 3-வது எதிரியாவர் அவர் மீது கடந்த 19.10.2023-ம் தேதியன்று இந்த வழக்கில் பெரம்பலூர் சார்பு நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்க முடியாத பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பிடியாணையானது 03.12.2024-ம் தேதி அதாவது சுமார் ஒரு வருடம் இரண்டு மாதங்கள் கழித்து மேற்படி எதிரி தாக்கல் செய்த மனுவில் பேரில் மனுதாரர்/3-வது எதிரி மீதான பிணையில் விட முடியாத பிடியாணை மேற்படி சார்பு நீதிமன்றத்தால் இரத்து செய்து திரும்ப பெறப்பட்டுள்ளது. மீண்டும் எதிரி இந்த வழக்கில் ஆஜராகததால் சுமார் பத்து மாதங்கள் கழித்து கடந்த 03.06.2025-ம் தேதி மேற்படி சார்பு நீதிமன்றத்தால் மனுதாரர்/3-வது எதிரி மீது பிணையில் விட முடியாத பிடியாணை இரண்டாவது முறையாக பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த வழக்கு மாண்புமிகு முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி அவர்களின் உத்தரவின் பேரில் இந்த நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டது. மேற்படி எதிரி இந்த வழக்கில் ஆஜராகததால் கடந்த 08.04.2026-ம் தேதி புதிதாக மீண்டும் மனுதாரர்/3-வது எதிரி மீது பிணையில் விட முடியாத பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட சூழ்நிலையில் மனுதாரர்/3-வது எதிரி இன்று இந்நீதிமன்றத்தில் சரணடைந்து தனக்கு எதிரான பிணையில் விட முடியாத

பிடியாணையை திரும்ப பெறக் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் கண்டுள்ள ஆவணங்களின்படி மனுதாரர்/3–வது எதிரி மீது இரண்டாவது முறையாக பிணையில் விட முடியாத பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதை கருத்தில்கொண்டும், மேற்படி மனுதாரர்/3–வது எதிரி மீது பிறப்பிக்கப்பட்ட பிணையில் விட முடியாத பிடியாணையை உடனடியாக திரும்பப் பெறுவதற்குண்டான சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் மிகவும் கால தாமதத்துடனும், அசட்டையுடனும் மனுதாரர்/3–வது எதிரி நடந்து கொண்ட அவரது நடத்தையை கருத்தில் கொண்டும், நிபந்தனையின் பேரில் இந்த மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, மனுதாரர்/3–வது எதிரி தினமும் மாலை 5.00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் ஆஜராகி மறுஉத்தரவு வரும்வரை கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் மனுதாரர்/3–வது எதிரி மீதான பிணையில் விட முடியாத பிடியாணை திரும்ப பெற உத்தரவிடப்படுகிறது. அதனடிப்படையில் இம்மனு நிபந்தனையின் பேரில் அனுமதிக்கப்படுகிறது.

இன்று 03.06.2026–ம் தேதி திறந்த நீதிமன்றத்தில் என்னால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

MURALITHARAKANNAN K

CHIEF JUDICIAL MAGISTRATE
Digitally signed by MURALITHARAKANNAN K
Location: PERAMBALUR

**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**